இறக்குமதி செய்யப்பட்ட
பவித்ர பரிசுப் பொருட்கள்
அழகு சாதனப் பொருட்கள், மதுபான வகைகளுக்குரிய சான பொருட்கள்,
மற்றும்
யப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலு முள்ள காதுகேட்கும் கருவிகள் யாவ நிறையும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்.
கிருபா கிவ்ற் கவுஸ்
KIRUBA GIFT HOUSE
சோமசுந்தரம் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்
தொலைபேசி 8083

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு

The EELA NADU

மலர் 21 ஐப்பசி 23 ஜுல்ஹஜ் 18 இதழ் 270
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9-11-79

சைவபோசனகாரர் மனதில் என்றும் நிலைத்திருப்பது
தேவி விலாஸ்
சுத்தம், சுவை, சுகாதாரம், அன்பான உபசரிப்பு!
விஜயம் செய்யுங்கள்
தேவி விலாஸ்
(மணிக்கூட்டுக் கோபுரம் சந்தி)
288, காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

சிங்களத் தேர்ச்சியின்மையால் பாதிக்கப்பட்ட

764 எழுது வினைஞர்களுக்கும்

சம்பளம் - பதவி உயர்வு!

மந்திரிசபை தீர்மானம்

(கொழும்பு)

1956 ம் ஆண்டுக்குமுன் பதவி நியமனம்பெற்ற சிங்களத்தில் தேர்ச்சி பெறாத பொது எழுதுவினைஞர் சேவையைச் சேர்ந்த முதலாம்தர எழுதுவினைஞர்களுக்கு சம்பள உயர்வுடன் பதவி உயர்வும் வழங்கப்படும்.

இது தொடர்பாக அமைச்சரவை முடிவு எடுத்திருப்பதாக அமைச்சரவைப் செயலாளர் திரு ஜி. வி. பி. சமரசிங்க அறிவித்தார்.

சிங்களத் தேர்ச்சி சம்பந்தமான 1971 ம் ஆண்டு சுற்றறிக்கையின் பதவி உயர்வு பெறமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ள 764 முதலாம்தர எழுதுவினைஞர்களுக்கு வருடாந்த சம்பள உயர்வுடன் பதவி உயர்வும் வழங்கப்படுமென்று அவர் தெரிவித்தார். ஆனால் இதற்கான சம்பளப் பாக்கிப்பணம் வழங்கப்படமாட்டாது.

அரசகாணிகளில் குடியிருப்போர்

அரசகாணிகளில் அத்துமீறி குடியேறியுள்ளவர்கள் வரன்காணிகளில் மூன்று ஏக்கருக்குமேல் சாகுபடி செய்திருப்பார்களானால் அவர்களுக்கு அக்காணிகள் உரிமை வழங்கப்படும். கேட்டு நிலங்களாகிய ஒருவருடன் சாகுபடி செய்திருப்பின் அக்காணி அவர்களுக்கு உரிமையாக்கப்படும். இவ்வாறு இல்லாத காணிகள் விசாரிக்கப்படும்.

தானியங்களுக்கு கொள்விலை

உற்பத்தியாளரின் நன்மைகருதி எடுக்கப்பட்டதான உப

(6-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் 'இராசு' யாழ். வருவார்

(கொழும்பு)

பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு செல்லையா இராஜதுரை, அடுத்தமாத நடுப்பகுதியில் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றினை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்வதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுவிட்டதாயினும், நேரம் இன்னும் நியமிக்கப்படவில்லையாம்.

நாவலர் மணிமண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு வைபவம், உக்க இந்த சபை இலங்கைக்கிளையின் பொதுவர் மேற்பு ஆகியவற்றில் அமைச்சர் கலந்துகொள்வார். முழுக்காவில் திட்டத்தை பார்வையிடுவதுடன் கரவெட்டி பரமானந்த ஆச்சிரமத்துக்கும் அவர் விஜயம் செய்வார்.

அமைச்சரைப் பொறுப்பேற்றபின்னர் முதல் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம்செய்யும் அமைச்சரின் விஜயத்திற்கான ஒழுங்குகளை. யாழ் மாவட்ட அமைச்சு செய்துவருகின்றது. (கெ-கு)

வீட்டுக்கொரு ஆடு இலவசம்

(புலோலி)

பருத்தித்துறை அப்பகுதி கிராமத்திலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு உயர்தரமான ஆட்டை இம்மாதமுடிவதிக் உலக விஷன் என்ற தாபனம் இலவசமாக வழங்கவுள்ளது.

ஆடுவழங்கப்படும் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஐந்து இப்பிக்-இப்பிக் கோழிகளும் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்டத்தில்

பொலிஸ்-பொதுமக்கள் ஒத்துழைப்பு

பல திருட்டுகள் அம்பலமாவதாக டி.ஐ.ஜி. மகேந்திரன் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பல்வேறு இடங்களிலும் தலைதூக்கிவரும் கொள்ளைகள், பொதுமக்களின் பெரும் ஒத்துழைப்புடன் பொலிஸாரினால் கண்டுபிடிக்கப்பட்டு வருவதாக வடபிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் திரு. பி. மகேந்திரன் 'ஈழநாடு' விடம்தெரிவித்தார்.

"துப்புத்துலக்க முடியாத பல திருட்டுகள் கூட இப்பொழுது, பொதுமக்களின் ஒத்துழைப்பினால் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன" என்று கருத்து வெளியிட்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் திரு பி. மகேந்திரன், பொலிசாருக்கு பொதுக்களின் அளிக்கும் ஒத்துழைப்பு இப்பொழுது வல்வெட்டித்துறை பகுதியிலும் ஏற்படுகிறது வரவேற்கத்தக்க விஷயமாகும் என்று கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தார

(2ம் பக்கம் பார்க்க)

எம். ஜி. ஆர். மீதான கண்டனப் பிரேரணை தோல்வி

சென்னை, நவ 8

தமிழ்நாடு அரசின் சொத்துக்களைக் கண்டித்து சட்டப்பேரவையில் கொண்டுவரப்பட்ட கண்டனத்தீர்மானம் தோல்வியடைந்தது. தீர்மானத்துக்கு ஆதரவாக 56 பேரும் எதிராக 144 பேரும் வாக்களித்தனர். 5 பேர் நடுநிலைமை வகித்தனர்.

பாப்பரசரைக் கொல்லச்சதி!

ரோம், நவ 8

புனித பாப்பரசர் இரண்டாவது இருளப்ப சிகிஸ்பரைக் கொலைசெய்ய முயன்ற இளைஞரை காவல்படையினர் கைது செய்தனர்

வத்திக்கானுள்ள நகரிலுள்ள பாப்பரசரின் வாசஸ்தலத்தில் பாப்பரசரைக் கொலைசெய்யப் போவதாகக் கூறிக் கொண்டு கத்தி ஒன்றுடன் நுழைந்த இந்த இளைஞரை கைதுசெய்தகாவல்படையினர் அவரை இத்தாலிப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த
சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற
ரி.எம்.சௌந்தரராஜனின்
சங்கீதக்கச்சேரியை
வீடியோ வர்ண தொலைக்காட்சியில்
கண்டுகளிக்க விரும்புவோர்
தொடர்புகொள்ளவும்:
நியூ விக்ரேஸ்
23, மணிக்கூட்டுவீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7804

ஆசிரியர் கவனத்திற்கு
பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் ஆசிரியர்கள், ஆசிரியைகள் இம்மாதம் 10-ம், 11-ம் திகதிகளில் (சனி, ஞாயிறு) நேரில்வரும்படி கேட்கப்படுகிறார்கள்.
தேசிய கல்வி நிறுவனம்,
11, மொம்சாக் கட்டடம்,
ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
4050

வரி விளம்பரம்

தேவை

இடமாற்றத்திற்குரிய அரசாங்க நிபுணர் ஒருவருக்கு குடியிருக்க கண்டுக்குவிக்கும் நல்லூருக்கும் இடையில் பதுதி வீடு (Annexe) அல்லது Flats தேவை. குவிவலை, அரசாங்க மற்றும் நவீன வசதிகளுடன் விருப்பத்தக்கது. மூன்று வருட காலத்தில் திருப்பிக்கொடுப்பதற்கு உத்தரவாதம் அளிக்கப்படும். தொடர்புகொள்ளவும் : மனேஜர் A. பவர் கம்பனி லிமிட், மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4041

தேவை

பீடி சுற்றுவதில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. விபரங்களுக்கு: அரசடி அம்மன் கோவில் ரோடு, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, திருநெல்வேலி அல்லது 26/1, பழம் ரோடு, சந்தர்வடக்கு, யாழ்ப்பாணம். 4025

வாகன நிலையம் ஒன்றுக்கு அனுபவமுள்ள ரெயிலர்கள் தேவை மோகன் இல்லம், நெல்லியடி, கரவெட்டி. 4043

அச்சுவேலி கிராமாட்சி மன்றம்

கேள்வி விளம்பரம் - 1980

1980-ம் ஆண்டிற்கு கீழ்க்காணும் குத்தகைகளுக்கு கேள்விகள் கீழ்க்குறிக்கப்பட்டவற்றிற்கு அமைவாக 23-11-1979-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்:

	கேள்விப் பிணை பணம்	கேள்விப் பத்திரப் பணம்
1. மாட்டிறைச்சிக்கடை இல. 1, 2	100/-	10/-
2. ஆட்டிறைச்சிக்கடை இல. 1	100/-	10/-
3. தம்பாலை/வளலாய் மரக்கறிச்சந்தை	100/-	10/-
4. அச்சுவேலி பொதுச்சந்தை	100/-	10/-

2. கேள்விப்பத்திரங்கள் 1979-ம் ஆண்டு மார்கழி மாதம் 22-ந் திகதி நண்பகல் 12-00 மணி வரை வழங்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்கள் அரசு முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் உள்ளடக்கப்பட்டவைகளாகவும், கடித உறையின் மேல் மூலையில் சமர்ப்பணம் செய்யப்படும் வாணிபத்தின் பெயர் குறிப்பிடப்பட்டவைகளாகவும் இருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் சபை அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடப்படலாம். அல்லது பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம்.
4. ஏற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைக்காரர் அறிவித்தல் கிடைத்த ஒரு வார காலத்தினுள் குத்தகைப்பணத்தில் மூன்றிலொரு (1/3) பங்கை வைப்புப்பணமாகக் கட்டி வழமையான நிபந்தனைகளின் உரிய பிணை முறியையும் கையொப்பத்திடல் வேண்டும்.
5. குத்தகைக்காரர் குத்தகைப் பண மீதியில் (1/3) அரைப் பங்கினை 31-3-1980 திகதிக்கு முன்னரும், மீதிப்பணத்தினை முழுமையாக 30-06-80-ந் திகதிக்கு முன்னரும் காரியாலயத்தில் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
6. குத்தகைத் தொகை திருப்திகரமான வருவாய் அல்லவென நிர்வாக உத்தியோகத்தர் அபிப்பிராயப்படுவாரேயானால் குத்தகையைப் பிரசித்த ஏலத்தில் விற்பதற்கு நிர்வாக உத்தியோகத்தருக்கு உரிமையுண்டு. அதனால் ஏல விற்பனை குத்தகைத் தொகையிலிருந்தே கழிக்கப்படும்.
7. கடிய கேள்விக்காரர்களுக்கு அவைக் குத்தகைக்குக் கொடுக்கவோ அன்றி நிராகரிக்கவோ நிர்வாக உத்தியோகத்தர் அவர்களுக்கு பூரண உரிமையுண்டு;
8. குத்தகைக்காரர் சபையால் குறிப்பிடப்படும் இடத்தில் தற்காலிக கொட்டகை அமைத்து சுகாதாரப் பரிசோதகரால் அங்கீகரிக்கப்பட்ட மிருகங்களை வெட்டுவதை செய்தல் வேண்டும்.
9. 1978, 1979 ம் ஆண்டுகளில் குத்தகைக்காரரால் பிரகடனப்படுத்தப்பட்டு குத்தகை ஒப்பந்தத்தை மீறியவர்களுக்கு குத்தகைக் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது.
10. காலத்துக்குக் காலம் அரசாங்கத்தால் அல்லது நிர்வாக உத்தியோகத்தரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக குத்தகைக்காரர் ஒழுகவேண்டும்.
11. மேலதிக விபரங்களைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளலாம்.

நிர்வாக உத்தியோகத்தர்,
கிராமசபை, அச்சுவேலி.

4038

மரண அறிவித்தல்

திரு சின்னத்தம்பி கதிரவேலு

நல்லூரைச் சேர்ந்த திரு சின்னத்தம்பி கதிரவேலு 7-11-79ல் சிவபதம் அடைந்துவிட்டார். இவர் திருமதி பரிமளத்தின் அன்புக் கணவரும் திருநாவுக்கரசு, கௌரிமனோகரி ஆகியோரின் தந்தையும், உருத்திர பதி, அனுசுயா பதி ஆகியோரின் மாமனாரும் ஆவார். ஈமக்கிரியைகள் 9-11-79 வெள்ளிக்கிழமை (இன்று) காலை 9-00 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

30, நாயன்மார் வீதி,
நல்லூர். யாழ்ப்பாணம்.

4033

விற்பனைக்கு

வெளிநாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட A 40 சோமசேட் கார்கள். இவ் பொக்ஸ் சகிதம் சிறந்த நிலையில் புதிய Wind Screen, Dynamo பற்றரி மற்றும் உறுப்புக்களுடன் உண்டு விசாரணைக்கு செல்வராஜா, மக்கள் நிரப்பு நிலையம், பண்டத்தரிப்பு. 4020

யாழ்ப்பாணம் சேர் பொன் இராமநாதன் வீதியில் நாச்சிமார் கோயிலுக்குச் சமீபத்தில் வீதிவட்டக்கூடிய ஒன்றரைப் பரப்புக்காணி விற்பனைக்குண்டு தரகர்கள் வேண்டிய ஒக்க தொடர்பு- எஸ் எஸ். சிவ வந்தம், 34, சேர் பொன் இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். 4044

கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் முல்லைத்தீவு

கேள்வி கோரல்

கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம் 5 தொன் இசுசு லொறிக்கு முழுவதாக மூடப்பட்ட (Body) உரு அமைப்பதற்கான கேள்வி கோரப்படுகிறது கேள்வியில் தெரிவு செய்யப்பட்டவர்சங்கத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

ஒப்பந்தத்தில் ஒப்பமிட்ட திகதியிலிருந்து இருமாத காலத்திற்குள் உரு அமைக்கப்படுதல் வேண்டும். சங்கக்காரியாலயத்தில் வைத்தே உரு அமைக்கப்படுதல் வேண்டும். மோட்டார் நடமாடிட ஆணையாளரின் அங்கீகாரம் பெறும் வரை ஒப்பந்தகாரர் ஒப்பந்தத்தை மீறக்கூடாது மீளப் பெறக் கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/- சங்கத்தில் கட்டுதல் வேண்டும்.

உரு அமைத்தலும் வர்ணம் தீட்டலும்.
மின் இணைப்புச் செய்தல்.
ரிங்கர் வேலை செய்தல்.

இவற்றிற்குத் தனித்தனி பாகக் கேள்விகோரி 14-11-1979ம் திகதிக்குமுன் தரவர், கரைதுறைப்பற்று ப. நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால்மூலம் அனுப்புதல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "வொறி உரு அமைப்பதற்கான கேள்வி" என எழுதுதல் வேண்டும். முடிவுத்திகதிக்குப் பின் கிடைக்கும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது;

சு. சற்குணசேயோன்,
பொதுமுகாமையாளர்.

முல்லைத்தீவு-2-11-79;

4022

வை.எம்.சி.ஏ. யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் வை எம் சி ஏ. தலைவர், கட்டிட ஒப்பந்தக்காரரிடமிருந்து தியானமண்டபம், நூலகம், உள்ளக விளையாட்டரங்கு (Gymnasium) நிறுவுவதற்கான கேள்வி விண்ணப்பங்களை கோருகின்றார், கேள்விக்கான விண்ணப்பப்படிவங்கள் வை எம்.சி ஏ. நிர்வாக காரியதரிசியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். கேள்விக்கான விண்ணப்பப்படிவங்கள் 12-11-79ந் திகதி தொடக்கம் 14-11-79ந் திகதி பிற்பகல் 2-00 மணி வரை விநியோகம் செய்யப்படும். கேள்வி விண்ணப்பங்கள் 16-11-79 பிற்பகல் 2-00 மணிக்குமுன் பதிவுத்தபாலில் "தலைவர், கட்டிட மைப்புக்குழு, வை. எம் சி ஏ. யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் 4040

சீலைப்முடிவுகள்

(கொழும்பு)

கடந்த செவ்வாய்க்கிழமை இழுக்கப்பட்ட 748-வது இலக்க தேசிய சீலைப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
08 B 0825
ரூபா 1,00,000/-
இரண்டாவது பரிசு
06 G 0304
ரூபா 40,000/-
மூன்றாவது பரிசு
23 V 0566
ரூபா 10,000/-
தலா ரூபா 1,116-90 சதம் கொண்ட 100 ஆறுதற் பரிசுகள் வருமாறு:-

01 A 0538	12 A 0596
14 A 0684	22 A 0249
27 A 0615	02 B 0302
12 B 0551	15 B 0156
02 C 0688	10 C 0949
16 C 0667	17 C 0315
19 C 0953	06 D 0703
01 E 0954	06 E 0256
19 E 0503	23 E 0170
13 F 0157	04 G 0953
05 G 0287	16 G 0808
07 G 0738	14 G 0004
18 G 0722	20 G 0499
02 H 0454	03 H 0617
06 H 0508	16 H 0345
21 H 0456	11 J 0881
03 K 0533	09 K 0857
15 K 0995	25 K 0888
09 L 0754	13 L 0862
13 L 0872	16 L 0900
06 M 0205	02 M 0390
14 M 0227	16 M 0235
03 N 0464	04 N 0226
14 N 0190	02 O 0284
13 O 0799	16 O 0770
24 O 0587	03 P 0491
03 P 0857	10 P 0935
19 P 0381	06 Q 0133
08 Q 0027	22 Q 0464
23 Q 0307	23 Q 0712
02 R 0467	04 R 0073
04 R 0476	17 R 0040
22 R 0978	27 R 0915
08 S 0622	17 S 0336
23 S 0465	03 U 0224
16 U 0391	16 U 0918
22 U 0677	25 U 0719
05 V 0766	06 V 0740
22 V 0824	23 V 0958
04 W 0316	07 W 0226
07 W 0652	16 W 0068
18 W 0709	09 X 0369
15 X 0876	16 X 0517
22 X 0210	24 X 0640
24 X 0693	08 Y 0494
14 Y 0622	21 Y 0634
27 Y 0166	02 Z 0079
02 Z 0431	04 Z 0638
13 Z 0172	15 Z 0328
17 Z 0954	2 Z 0754

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

பச்சிலைப்பள்ளி பல. நோ. கூ. சங்கம் பளை

வெற்றுச்சாக்கு கேள்வி விளம்பரம்

பச்சிலைப்பள்ளி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000க்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகள் விற்பனைக்கு இருக்கின்றன.

ரூபா 100/- (நூறு) சங்கத்தின் அலுவலகத்தில் கட்டி கேள்விப்பத்திரப் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கெனவே 100/- கட்டிய விண்ணப்பதாரர் இம்முறை கட்டத் தேவையில்லை. கேள்விப் பத்திரங்கள் யாவும் 20-11-79 ந் திகதி காலை 10 மணிக்கு முன்பதாகப் பதிவுத்தபால் மூலம் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும். கேள்விப்பத்திரம் அனுப்பும் தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் "வெற்றுச்சாக்குகளுக்கான கேள்வி" எனக் குறிப்பிடல் வேண்டும்.

தலைவர்,
பச்சிலைப்பள்ளி
பல. நோ. கூ. சங்கம்,
பளை.

07-11-79. 4036

விளம்பரம்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து) பருத்தித்துறை

பதவி வெற்றிடம்

பாண் தயாரிப்பாளர்கள்

இச்சங்கத்தில் பேக்கரியில் கடமையாற்றுவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து வருடம் (பிரபல பாண் தயாரிப்பு நிலையத்தில்) சேவை அனுபவமுள்ள பாண் தயாரிப்பாளர்கள் தேவை

விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அனுபவச் சான்றிதழ் நற்சான்றிதழ்களுக்கான பிரதிகளுடன் இணைத்து பதிவுத்தபால் மூலம் "தலைவர், குருந்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை" என்ற விலாசத்திற்கு 21-11-79-ந் திகதிக்கு முன்பாக அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.

திகதி: 07-11-79; (4035)

பொலிஸ்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

வது:

"கடந்த மாதம் 26-ம் திகதி வல்வெட்டித்துறையில், செல்வராசா இராசமணி என்பவர், டெலிவிஷன் பார்க்க பக்கத்து வீட்டுக்குச் சென்றிருந்தபோது இரவு வீட்டிலுள்ள நகைகளும், ரொக்கப்பணமும் திருடப்பட்டுள்ளன அறிவுறுத்தல்கள், இவருக்கு கடுத்த நாள் தான், 65,000 ரூபா பெறுமதியான நகைகளும் 2,200 ரூபா பெறுமதியான ரொக்கப்பணமும் திருடப்பட்ட விபரம் தெரிவித்துள்ளது. இதனைத்தொடர்ந்து இவர் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

"இத்திருட்டு விஷயத்தில், பொதுமக்கள் கொடுத்த இரகசியத் தகவலைத் தொடர்ந்து, பொலிஸார் ஒரு சிலரை சந்தேகிக்கக்கூடிய வகையில் வல்வெட்டித்துறையில் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்து திருட்டுப்போன 65,000 ரூபா பெறுமதியான நகைகளையும், 2,200 ரூபா ரொக்கப்பணத்தையும் மீட்டுள்ளனர். இது மிகவும் பாராட்டத்தக்க வரவேற்கக்கூடிய விஷயமாகும். பொலிஸாருக்கும்- பொதுமக்களுக்குமிடையே நிலவும் நல்லுறவு மேலும் பலப்படுமானால், வடபகுதியிலிருந்து திருட்டுக்களையே ஒழித்துவிடலாம்" என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு பி மகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

பொலிஸாருக்கு பொதுமக்கள் அளித்து வரும் ஆதரவுடன் ஒத்துழைப்பு காரணமாக, யாழ்ப்பாணம், காங்கேசன்துறை, சங்கானை போன்ற பகுதிகளிலும் நீண்டகாலத் திருட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த உறவு மேலும் நீடிக்க வேண்டும்" என்றும் டி, ஐ ஜி. பி. மகேந்திரன் கேட்டுக் கொண்டார்.

மேற்படி வல்வெட்டித்துறை திருட்டு சம்பந்தமாக வல்வெட்டித்துறையில் சந்தேகத்தின்பேரில் தற்காலிகவேலை என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்;

இராணுவ சர்வாதிகாரம்பற்றி 'அமிர்' எச்சரிக்கை!

"அரசியல் பிரச்னைகளை இராணுவ அதிகாரத்தால் தீர்க்கமுடியாது!-'சிவா'"

மக்கள் கருத்து

மன்னார்வீதிகளின் அவலநிலை

மன்னாரில் நற்பொழுது பெய்துவரும் மழையினால் அநேக வீதிகளில் குழிகள் தோன்றியுள்ளன. வீதிகளுக்குத் தார்போடுவதும் மழைவந்தால் அதை அரித்துக்கொண்டு வரக் குழிகள் தோன்றுவதுமே மன்னாரப் பகுதியில் சர்வசாதாரணமாகும். உரிய முறையில் வீதிகளுக்குத் தார் போட்டுச் செப்பனிடாமை யாலேயே இந்நிலைமை ஏற்படுகிறது. கோயில்வீதி, மடத்து வீதி, தலைமன்னார்வீதி, உப்புக்குளவீதி, வைத்தியசாலைவீதி, ஆகியன படுமோசமான நிலையில் பள்ளங்களிலே தண்ணீரும் சகதியுமாகக் காணப்படுகின்றன.

மன்னார் வர்த்தக நிலையங்கள் எல்லாம் நவீன மாடிக்கட்டிடங்களாக எழுகுறக் காட்சிகளிலும் இவ்வேளையில் இந்த வீதிகளுக் அழகுறக் காட்சியளிக்க வேண்டாமா? இங்கு அடிக்கடி வரும் வெளிநாட்டுப் பயணிகளையும் கவரும்வண்ணம் மற்ற நாடுகளிலே போன்று நல்ல முறையில் திருத்தம் செய்து வீதிகள் அழகாவும், சுகாதாரமாகவும் வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் சௌகரியமாகவும் இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வழிவகுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வி. பிரான்சிஸ்
புனித. செபஸ்தியார்வீதி,
மன்னார்.

0 0 0

சமயப்பரீட்சை

'ஈழநாடு' 3-11-79 திகதிய பத்திரிகையில் 6ம் பக்கத்தில் பிரசுரமாகியிருந்த "பெற்றோரின் தலையீட்டால் நாளை பரீட்சைக்குத் தோற்றுவர்" என்ற செய்தி தொடர்பாக இலங்கை சைவ சமய பரீட்சை பரீட்சகரை தொடர்புகொண்டமாறு மகாவித்தியாலய மாணவர்கள் இம்முறை எடுக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டபோது அவ்வூர் தனவந்தருக் கிந்து யாலய ஸ்தாபகரின் கனுகரன திரு வீ. இராசசேகரமும் வடமாநில கல்வி பணிப்பாளர் திரு தி. மாணிக்கவாசகரும் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக பிள்ளைகள் இன்றைத் 4ம் திகதி நடைபெற்ற பரீட்சையை எழுத முடிந்ததில் பெரு மகிழ்ச்சியடைகிறோம். இதற்கு காரணகர்த்தாக்களாக நின்ற இருவருடன் சைவ பரிபாலன சபையோரையும் பாராட்டுகின்றோம்.

திரு. வீ. இராசசேகரத்திடம் இதுபற்றி ஆராய்ந்தபோது, அதிபர் எழுதிய கடிதத்தில் ஒரு பகுதியில் அதாவது "சைவபரிபாலன சபைப் பரீட்சை பற்றிய முடிவு எம்னுடைய நிர்வாக ரீதியான முடிவு. இதில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரின் தலையீடோ நான் விரும்பவில்லை" என்கிறபிடியிலிருந்தமை அவதானிக்கமுடிந்தது.

வருவாய்க்குமிக்க செல்வச்சந்நிதி ஆலயம் அமைந்திருக்கும் தொண்டைமானாற்றின் சைவ மரபுக்கிணங்கவும் சமயபரீட்சைக்கும் பரீட்சார்த்தி கள் தோற்றுவதற்கு நிர்வாகிகள் ஏற்படுத்திய விசுவாசமிக்க கண்டிப்புடனும், அரசு கல்விக் கொள்கையில் சமயம் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதையும் அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவருகின்றோம்.

இதெல்லாம் சைவம் அல்லாத பிறமதப்பாடசாலைகளிலும் இந்துமாணவர்களை சமயபரீட்சை எழுப்பதற்கு ஊக்கமளித்து உதவுவதை மேற்படி வித்தியாலய நிர்வாகம் அறியாதா? பரீட்சையில் தோற்றமுடியாதுபோன ஒரு சில மாணவரின் பெற்றோரும் கவலை அடைந்துள்ளார்கள். இவ்வாறு மாணவரின் முன்னேற்றத்தையும் சமய வளர்ச்சியையும் பாதிப்புறச் செய்யும் வகையில் திடீரென ஏற்படுத்தும் அதிபர்களின் தான்தோன்றித் தனத்தை கேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவது மிக மிக அவசியமாகும்.

மேலும் எதிர்காலத்திலும் இதுபோன்ற இக்கட்டான நிலைமை ஏற்படுத்தாமல் மாணவர் நலன்கருதியும் சமய வளர்ச்சிக்காகவும் உரியகாலத்தில் நல்ல நடவடிக்கைகளை மேற்கொண்டு ஒத்துழைத்த நன்மதிப்பையும் அதிபர் பெறுவார் என நம்புகிறோம்.

ந. சுப்பிரமணியம்
இராசாவின் தோட்டவீதி
யாழ்ப்பாணம்.

(கொழும்பு)

"நாட்டின் தென்பகுதியில் அண்மைய சந்திரரேவையும் இன்னும் சிலரையும் பொலிஸார் கைதுசெய்தனர் என்றால் பொலிஸாருக்கு வெகுமதிகளும் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன. சந்திரரேவைப் பொலிஸார் கைதுசெய்த போது, அருகிலிருந்த பகுதிகள் எதுவும், பொலிஸார் நுழையமுடியாதபடி எல்லாம் நடந்திருக்கலாமோ என்று எண்ணி நாம் பயப்பட வேண்டியுள்ளது. இதற்காக நாம் எந்தநாளும் ஜனாதிபதியைச் சந்தித்து முறையிட்டுக் கொண்டிருக்கமுடியாது. அதேவேளை, ஆகியவற்றுக்கு நிரந்தர முற்றுப்புள்ளி அவசியமாகும்."

"பல நாடுகளில் இராணுவத்தினர் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றுவதை நாம் கேள்விப்படுகின்றோம். எமது நாட்டில் அப்படி நடைபெறுதல் அதிஷ்டவசமானதே. நீண்டகாலத்துக்கு அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டமே ஆயுதப்படைகள் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்ற வசதியாக அமைந்துவிடுகிறது. இதுகூட்டி நிலைமை இப்போது பயங்கரமானதாக மாறிவருகின்றன. நாட்டில் இராணுவச் சர்வாதிகாரம் ஏற்படுகின்றவரை காத்திருக்காது, அவசரகாலச் சட்டத்தை அரசாங்கம் உடனடியாக வாபஸ்பெறவேண்டும்.

"எனது தொகுதியைச் சேர்ந்த எம். புஷ்பராஜா என்ற வெளிவாரி பட்டதாரி மாணவனைப் பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்திருந்தார்கள். திங்கட்கிழமை மாலை ஒரு மணிக்கு அவரைப் பொலிஸாரே யாழ் ஆஸ்பத்திரியில் கொண்டுசேர்த்திருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் தடுத்துவைத்திருந்தபோது அவர் கீழே விழுந்ததால் அவரது உடலில் உட்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றுதான் அவரது முழு உடலும் வீங்கியுள்ளது.

"வேலை முடிந்து மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். ஒருவர் பொலிஸாரால் தேடப்படுகின்ற ஒருவரை ஒத்திருந்தார் என்ற காரணத்தாலேயே கைதுசெய்யப்பட்டார். ஈவிரக்கமற்ற முறையில் அவர்கள் இத்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். அவர்களது மரணவாக்குமூலம், மேலை விசாரணை நடத்தியபோது, இரண்டு 'ஜீப்' வாகனங்களில் ஆயுதப்படையினர் வந்து நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர். இது நீதவான் சுதந்திரமாக நீதிவழங்குவதில் தலையீடு செய்வது இல்லையா? யாழ் நகரில் ஆயுதப்படையினர் வாகனங்களில் எந்த நேரமும் ஓடித் திரிவதைப் பார்த்தால், நாட்டில் ஏதோ ஒரு நெருக்கடி இருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது!

வடக்கில் மட்டும்தான் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. ஆனால் சென்றவாரம் இராணுவத்தினர் சட்டவிரோதமான முறையில் கிறஷரை நாகாணத்திலுள்ள மன்னார், சந்திவெளி, சித்தாண்டி ஆகிய இடங்களில் பொதுமக்களை தாக்கியுள்ளனர். இவர்களின் கொடுஞ்செயலுக்குப் பயந்து, ஒரு குடும்பமே தலைமறைவாகிவிட்டது.

"மன்னாரில் கந்தசஷ்டி விரதத்தில் கலந்து நாளைய சப்பாத்து, தொப்பியணிந்த இராணுவத்தினர் ஆலயத்தின் மூலஸ்தானத்திற்குள்ளேயும், மடப்பள்ளிக்குள்ளேயும் சென்றிருக்கின்றனர்.

"இராணுவத்தினரைத் திருப்பி அனுப்புவதொன்றே சரியான பரிகாரமாகும். அரசாங்கம் ஒருபக்கம் நிர்வாக ரீதியாக பரவலாக்க ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் மறுபக்கம் கொடுமைகளையும் கட்டவிழ்த்து விடுகிறது. இதனால் அரசுக்கு நன்மை ஏற்படமாட்டாது" என்றார்.

வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

"கைத்தொழில் அமைச்சருக்கு தமிழரசுக் பிரச்னை

"இந்த மண்ணில்தான் நாம் பிறந்தோம்-இங்குதான் நாம் மடிவோம்"—வவுனியா எம். பி.

பாராளுமன்றத்தில் தமிழ் எம். பி.க்கள் பலத்த கண்டனம்!

'தென்னாபிரிக்கா போன்று எதுவும் நடக்கக் கூடாது"

ரிக் பகிரவாத நடவடிக்கைகளுக்கு ஆரம்பிக்க பொதுமக்கள் பயமுறுத்தப்படவில்லை. ஆனால் வடக்கு, கிழக்கில் எவரையும் பொலிஸார் கைது செய்யும்போதும் இந்த மாதிரியா நடைபெறுகிறது? ஆனால் எல்லா மக்களையும் ஒரேவாறாக நடத்துவதாக அரசாங்கம் சொல்லிக் கொள்கிறது!"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் பேசுகையில் கூறினார்.

யாழ். நிர்வாக மாவட்டத்திலும், கட்டுநாயக்கா விமானநிலையப் பகுதியிலும் அவசரகாலச்சட்டத்தை மேலும் நீடிக்கும் ஜனாதிபதியின் பிரகடனத்தை அங்கீகரிக்கும் பிரேரணை மீது நடைபெற்ற விவாதத்தில் திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"எனது பகுதியில் அவசரகாலச்சட்டத்தை அரசாங்கம் உடனடியாக வாபஸ்பெறவேண்டும்.

"எனது தொகுதியைச் சேர்ந்த எம். புஷ்பராஜா என்ற வெளிவாரி பட்டதாரி மாணவனைப் பொலிஸார் கைதுசெய்து தடுத்துவைத்திருந்தார்கள். திங்கட்கிழமை மாலை ஒரு மணிக்கு அவரைப் பொலிஸாரே யாழ் ஆஸ்பத்திரியில் கொண்டுசேர்த்திருக்கின்றார்கள் என்று எனக்குத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் தடுத்துவைத்திருந்தபோது அவர் கீழே விழுந்ததால் அவரது உடலில் உட்காயங்கள் ஏற்பட்டுள்ளன என்றுதான் அவரது முழு உடலும் வீங்கியுள்ளது.

"வேலை முடிந்து மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வந்த இருவர் கைதுசெய்யப்பட்டனர். ஒருவர் பொலிஸாரால் தேடப்படுகின்ற ஒருவரை ஒத்திருந்தார் என்ற காரணத்தாலேயே கைதுசெய்யப்பட்டார். ஈவிரக்கமற்ற முறையில் அவர்கள் இத்திரவதைக்குட்படுத்தப்பட்டனர். அவர்களது மரணவாக்குமூலம், மேலை விசாரணை நடத்தியபோது, இரண்டு 'ஜீப்' வாகனங்களில் ஆயுதப்படையினர் வந்து நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர். இது நீதவான் சுதந்திரமாக நீதிவழங்குவதில் தலையீடு செய்வது இல்லையா? யாழ் நகரில் ஆயுதப்படையினர் வாகனங்களில் எந்த நேரமும் ஓடித் திரிவதைப் பார்த்தால், நாட்டில் ஏதோ ஒரு நெருக்கடி இருக்கிறதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது!

வடக்கில் மட்டும்தான் அவசரகாலச் சட்டம் அமுலில் உள்ளது. ஆனால் சென்றவாரம் இராணுவத்தினர் சட்டவிரோதமான முறையில் கிறஷரை நாகாணத்திலுள்ள மன்னார், சந்திவெளி, சித்தாண்டி ஆகிய இடங்களில் பொதுமக்களை தாக்கியுள்ளனர். இவர்களின் கொடுஞ்செயலுக்குப் பயந்து, ஒரு குடும்பமே தலைமறைவாகிவிட்டது.

"மன்னாரில் கந்தசஷ்டி விரதத்தில் கலந்து நாளைய சப்பாத்து, தொப்பியணிந்த இராணுவத்தினர் ஆலயத்தின் மூலஸ்தானத்திற்குள்ளேயும், மடப்பள்ளிக்குள்ளேயும் சென்றிருக்கின்றனர்.

"இராணுவத்தினரைத் திருப்பி அனுப்புவதொன்றே சரியான பரிகாரமாகும். அரசாங்கம் ஒருபக்கம் நிர்வாக ரீதியாக பரவலாக்க ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து நடவடிக்கை எடுக்கும் அதே நேரத்தில் மறுபக்கம் கொடுமைகளையும் கட்டவிழ்த்து விடுகிறது. இதனால் அரசுக்கு நன்மை ஏற்படமாட்டாது" என்றார்.

வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

"கைத்தொழில் அமைச்சருக்கு தமிழரசுக் பிரச்னை

நல்லதல்ல" என்று கூறினார். நல்லூர் எம் பி திரு எம்

சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது:

"அவசரகாலச் சட்டத்தின் கீழ் அண்மையில் யாழ் நகரில் நிகழ்ந்த மரணம் ஒரு கொலை என்று மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பு வழங்கினார். அதையிட்டு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன என்பதை நாம் அறியவிரும்புகின்றோம்.

"யாழ் நீதவான் மரணவிசாரணை நடத்தியபோது, எம்மால் 'ஜீப்' வாகனங்களில் ஆயுதப்படையினர் வந்து நீதிமன்றத்தில் குழுமியிருந்தனர் என்றார். ஆனால் சென்றவாரம் இராணுவத்தினர் சட்டவிரோதமான முறையில் கிறஷரை நாகாணத்திலுள்ள மன்னார், சந்திவெளி, சித்தாண்டி ஆகிய இடங்களில் பொதுமக்களை தாக்கியுள்ளனர் என்றால் ஓர் அலர்ஜி. வடக்கில் அவசரகாலச் சட்டம் அமுலுக்கு வந்தவுடன் புலிகள் மட்டுமல்ல, புளொட் குட்டிகளும் இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து விட்டதாக கடந்த மாதம் இங்கு மார்தட்டிப் பேசினார். ஆனால் இன்று வருகிறபடி விட்டும் பேசுகின்றார். அன்று உங்களுடன் சேர்ந்து உங்கள் சுதந்திரத்துக்காகவும் போராடினோம். இன்று எங்கள் உரிமைக்காகப் போராடுகின்றோம். நாங்களும் இந்த மண்ணில்தான் பிறந்தோம். இந்த மண்ணில்தான் மடிவோம். புலிகளைச் சட்டம் கொண்டுவந்தீர்களே, ஒரு புலியை விடுங்கள்; அதன் வரலாறாவது பிடித்தீர்களா?" என்று கேட்டார்.

மாவிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில்,

"கடந்த வருடம் நாளொன்றுக்கு மூன்று கொலைகள் வீதமாக நாட்டில் நடைபெற்றுள்ளன. 128 துப்பாக்கிகள் யாழ்ப்பாணத்துக்கு வெளியே காணாதபோகியுள்ளன. புதிதாக பொலிஸிலிருந்தே 13 துப்பாக்கிகள், 3144 தோட்டாக்கள், 50 சங்கேதங்கள் மறைந்திருக்கின்றன. ஆனால் வடக்கில் மட்டுமே அவசரகால நிலை பிரயோகப்படுத்தப் படுகின்றது" என்றார்.

இந்தியா பிளவுபட்டது | **ஏழ்மை அதிகரித்தது** | **லட்சம் பேருக்கு துன்பம்**

நேருவின் கொள்கையே இவற்றுக்குக் காரணமாம்

ராஜ் நாராயண் சாடுகிறார்

புதுடில்லி, நவ. 8

"இந்தியா இரண்டாகப் பிளவுபட்டதற்கு நேருவின் கொள்கையே காரணம். இத்தகைய நேருவின் கொள்கைக்கு மறு உருவம் கொடுக்கப்போவதாக இந்திய ஜனநாயக காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எச். எம். பஹாகுணா கூறிவருவது அர்த்தமற்றது."

இவ்வாறு மக்கள் கட்சியின் தலைவர் திரு. ராஜ் நாராயண் பதுடில்லியில் நிருபர்களை மத்தியில் பேசையில் கூறினார்.

நேருவின் கொள்கைக்குத் தலைமை வகிக்க எல்லாக் கூறி வருகிறார் திரு பஹாகுணா இதை ஒருபோதும் நாடுஒப்புக் கொள்ள மாட்டாதென்றும் திரு ராஜ்நாராயண் கூறினார்.

நேருவின் கொள்கையிலேயே இந்தியா ஏழ்மைநிலைமைக்குத் தள்ளப்பட்டு லட்சக்கணக்கான மக்கள் துன்பத்திற்குள்ளாகியுள்ளதென்றும் அவர் கூறினார். [இ]

விவசாயத்தைப் புறக்கணிக்கும் எந்தநாடும் முன்னேறாது

இந்தியப் பிரதமர் சரண்சிங் கருத்து

ஐதராபாத், நவ 8

விவசாயத்தைப் புறக்கணிக்கும் எந்தஒரு நாடும் முன்னேற முடியாது எனவேதான் விவசாயத்துறையின் செழிப்புக்கு அயராது உழைப்பதென்றால் உறுதி பூண்டுள்ளேன்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங் ஐதராபாத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்:

காங்கிரஸ்(ஐ) தனது 30 ஆண்டு ஆட்சிக்காலத்தில் வேலை வாய்ப்பை அதிகரிக்கக் கூடிய சிறுதொழில்களைப் புறக்கணித்துவிட்டது. இதனாலேயே பொருளாதாரத் துறையில் இந்தியா பின்தங்கிய நிலையில் உள்ளதென்றும் திரு. சரண்சிங் கூறினார். [இ]

இந்திய தேர்தலில் மக்களின் பணி

தேராய் விளக்கம்

புதுடில்லி, நவ. 8

கம்யூனிஸம், சர்வாதிகாரம், ஜனநாயகம்- இவற்றில் எதுவேண்டுமென்பதை எதிர்வரும் தேர்தலில் முடிவுசெய்ய வேண்டும்.

இவ்வாறு திரு மொரார்ஜி தேராய் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசையில் கூறினார்.

ஜனதாகட்சி ஜனநாயகத்தைப் பற்றிநிற்கிறது தனிப்பட்ட எவரையும் அது தாங்கி நிற்கவில்லை. மக்களின் ஆதரவு ஜனதாகட்சிக்கு இன்றும் இருந்துவருகிறதென்பதை எவரும் மறுக்க முடியாதென்றும் அவர் கூறினார் [இ]

சோவியத்புரட்சி தினத்தில் பிரதமர் பங்குபற்றவில்லை

மாஸ்கோ, நவ 8

சோவியத் அக்டோபர் புரட்சியின் மாஸ்கோவில் வழமையான ராணுவபேரணியுடன் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது

விழா நிகழ்ச்சிகளில் சோவியத் அதிபர் திரு லியோனிட் பிரஸ்னேவ் உட்பட தலைவர்களுக் கலந்து கொண்டனர். ஆனால் பிரதம மந்திரி திரு. அலெக்ஸி கொசிஜின் பாராதிரக் கலந்து கொள்ளவில்லை. இவர் சுகவீனமுற்றிருக்கலாமென்று கருதப்படுகின்றது.

கென்னடி தேர்தல் பிரசாரம் ஆரம்பம்

கூட்டத்தில்ஜாக்குலினும் பங்குபற்றினார்

பொஸ்டன், நவ. 8

அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிடப் போவதாக உத்தியோகபூர்வமாக அறிவித்திருக்கும் செனட்டர் எட்வேர்ட் கென்னடி நேற்றுமாலை தேர்தல் பிரசாரக் கூட்டத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்தார்.

பொஸ்டன் நகரில் நடைபெற்ற இக்கூட்டத்தில் 47வயதான திரு. கென்னடி, தற்போதைய அதிபர் திரு ஜிம்மி கார்ட்டரை பலமாகக் கண்டித்து உரைநிகழ்த்தினார்

இக்கூட்டத்தில் கென்னடி சகோதரர்களின் 89 வயது தாயார், திருமதி ஜாக்குலின் கென்னடி, ஹிப்பாக்கிரிட்டுக்குப் பலியான செனட்டர் ரொபேர்ட் கென்னடியின் பாரியார், திரு எட்வேர்ட் கென்னடியின் பாரியார் ஆகியோருமே இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

திரு எட்வேர்ட் கென்னடி ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது அவரது குடும்பத்தினர் எவருக்குமே விருப்பமில்லை என்பது குறிப்பிடத்தக்கது. [இ]

இன்று இலங்கைவரும் பிரி. போர்க்கப்பல்கள்

[கொழும்பு]

ரோயல் கடற்படையைச் சேர்ந்த மூன்று போர்க்கப்பல்கள் இன்று கொழும்புத்துறைமுகத்திற்கு வருகின்றன.

நல்லெண்ண விஜயம் ஒன்றை மேற்கொள்ளும் இக் கப்பல்கள் இம் மாதம் 13 திகதிவரை கொழும்புத்துறைமுகத்தில் தங்கிநிற்கும்.

ஜனதாகட்சி வேட்பாளர் பட்டியல்

புதுடில்லி, நவ. 8

இந்திய இடைத்தேர்தலில் போட்டியிடும் ஜனதாகட்சியின் முதலாவது வேட்பாளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது

6 மாநிலங்களிலும் 3 யூனியன்பிரதேசங்களிலும்போட்டியிடும் 118 வேட்பாளர்களின் பெயர்கள் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளன. [இ]

இந்திராவைத் தண்டிக்க சரண் ஆர்வம்

(புதுடில்லி)

திருமதி இந்திராகாந்தி பிரதம மந்திரியாக இருந்த காலத்தில் இழைத்த குற்றங்களுக்காக அவரை கடுங்காவலில் ஜெயிலுக்கு அனுப்ப வேண்டும் என்று இந்திய காபந்து பிரதமமந்திரி திரு சரண்சிங் கருதியிருக்கிறார்.

கப்பல்கள் வந்து சேர்ந்ததும், பிரேஷ்ட ரோயல் கடற்படைக் கப்பலான கப்டன் கே ஏ கிரேஜி இலங்கைக் கடற்படைத்தளபதி கமடோர் ஏ எச் ஏ டி சில்வாவைச் சென்று சந்திப்பார். கப்பல்களைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும் மாலுமிகளுக்கும் இலங்கையில் சமூக நிகழ்ச்சிகளும், விளையாட்டு நிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமை ஒரு அதிகாரியும் 24 மாலுமிகளும் கடற்கரை குழு ஒன்று விகாரமாதேவி பூங்காவில் அமைந்துள்ள புத்த ஞாபகச்சின்னத்தருகே நடைபெறும் நினைவு ஊர்வலத்தில் பங்கு கொள்ளும் கப்டன் கிரேஜி ரோயல் கடற்படையின் சார்பில் மலர் வளையம் சாத்துவார். [இ]

இலவச திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

கடற்படை நிரவியர்களின் ஆராய்ச்சிபெற்றிய வாணவேடிக்கை மாலை மயிலிட்டி வாழ் கடற் றொழிலாளரின் படகு கரை நாளை சனிக்கிழமை மாலை 6-00 மணியளவில் ஊறணி புனித அந்தோனியார் ஆலய முன்றலிலும் மாலை 7-00 மணியளவில் மயிலிட்டி மாதாகோவில் முன்றலிலும் காண்பிக்கப்படவிருக்கிறது. யாழ் மிக்கவைத்தியாபனத்தின் ஆதரவில் இக்காட்சிகள் நடைபெறுகின்றன.

நெல் விளைச்சல் பெருக நிலையான துணை

ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 டீபீஏ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை, மும்மூட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.

ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F-34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

TAL 5920

REGAL (Jaffna) Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p.m only

BURT LANCASTER in

'ULZANA'S RAID

Co-starring: BRUCE DAVISON - RICHARD JAECKEL
A Universal Picture

Under 17years requires Accompanying parent or Adults

RAJAH A JAFFNA — TODAY ONLY Daily at 10-30 a m 2-00, 4-30, 7-00, & 9-30 p.m.

PETER FONDA IN

FIGHTING MAD

(F)பைட்டிங் மாட்

(Color by Deluxe)
(Strictly for Adults)
(வயது வந்தவர்களுக்கு மட்டும்)

RANEE CINEMA- Jaffna

Daily 5 Shows at 10-30 a m, 2-15, 4-45, 7-15 & 9-45 p.m

THE EXORCIST

COLOR — DO NOT MISS!

"த எக்ஸோர்சிஸ்ற்"

(அதிபயங்கர சித்திரம்)

(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK.)
(ADULTS ONLY)

6-வது ஜனத்திரள் வாரம்

ஸ்ரீதர் (வாழ் நகர்) தினசரி காலை 10-30, பி ப 2 30, 6-15, 9-45.

சிவாஜிகணேசன் - சுஜாதா நடித்த (வெள்ளிவிழாச் சித்திரம்)

தீபம்

(வர்ணக்கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 10-30, பி.ப.2-30 6-30, 9-30

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி நடித்த

என் கடமை

(புதிய பிரதி)

6-வது ஜனத்திரள் வாரம்

மனோஹரா A யாழ்ப்பாணம்

தினசரி 4 காட்சிகள்

சிவாஜி சுஜாதா, சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன், மனோரமா, குமாரி நடித்த

முக்தா பிலிம்சாரின்

அந்தமான் காதலி

(வண்ணப்படம்)

வெலிங்டன் (சாவகச்சேரி) தினசரி 8 காட்சிகள் சனி-ஞாயிறு 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். - லதா

நினைத்ததை முடிப்பவன்

(புதிய பிரதி)

லிடோ (வாழ்.நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள்

எம். ஜி. ஆர். - சரோஜாதேவி

பணத்தோட்டம்

RIO Jaffna Phone: 7601

Daily 10-30 a.m. 4-40, 7-00 & 9-30 p.m.

Captive City

நாகம்ஸ் (கல்லுவில்)

தினசரி 6-30, 9-30.
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி. ஆர்.—பத்மினி

ராணிசம்யுக்தா

வெஸ்லி (மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-சாவித்திரி

எல்லாம் உனக்காக

சாந்தி யாழ்நகர். போன்: 7642. 4வது ஜனத்திரள் வாரம்!

தினசரி 10-30, 2-30, 6-30, 9-45.

- ஜெய்சங்கர்
- ஸ்ரீ தேவி
- ஸ்ரீ காந்த்
- சிவசோதன்
- எம் ஜி. ஆர்.
- லதா
- மனோரமா
- சுருளிராஜன்

பாக்ஸிடிரைவர்

காதலினிய பாடல்கள்! கண்கவர் நடனங்கள்! கலையுயிரும் காதற் காட்சிகள்!
மற்றும் பயங்கரச் சண்டைகள் நிறைந்த வண்ணத்திரை ஓவியம்.

பொருளாதாரப் புரட்சியில் 'மீதேன்வாயு' வின்பங்கு

கருணைராஜன் தரும் விளக்கம்

"மீதேன்வாயு' விற் மூலம் புரட்சிகர பொருளாதாரமாற்றத்தை நாம் பெறமுடியும். சுகாதாரச் சீர்கேடு மறையும். விவசாயத்திலும் பாரமுட்டை முதலானவற்றிலும் கணிசமான பெறுமதி பெறலாம். நம் இளைஞர்கள் பொருளீட்டுவதற்காக வேற்றுநாடுகளுக்குச் செல்லவேண்டியதில்லை. இவ்வாயு உற்பத்திக்கான செலவும் குறைவாகவே இருக்கும். மண்ணெண்ணை விலையதிகரித்துள்ள இக்காலகட்டத்தில் 'மீதேன்வாயு' நமக்கு அதிக பயன் தருவதாகும். மிகக் குறைந்த செலவில் சமையல் முடியும்; வெளிச்சம் கிடைக்கும்."

களிற் சாணம், கோழி எச்சம் முதலான கழிவுகளை எரிப்பதன் மூலம் பெறப்படும் மீதேன் வாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் பிறந்த பயனை நாம் வீடுகளிற் பெறமுடியும்.

வீட்டிலுள்ள பெண்கள் மீதேன் வாயுவைப் பயன்படுத்திச் சமையல் செய்வதன் மூலம் விறகுப் பிரச்னையைத் தீர்த்துக்கொள்ளலாம். எரித்த கழிவுகளின் சாம்பல் சிறந்த பசளையாகும். விவசாயிகள் வயல்களிற் இதனைப்பயன்படுத்தி விளைவைக்கூட்டலாம்.

எமது இளைஞர்கள் நாட்டை வளப்படுத்துவதன் மூலம் மீதேன் வாயுக்கான போர் போர்க் கொண்டு வெளிநாடு செல்வது யாழ்ப்பாணப் பிரதேசப் பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கிறது என்றே கூறவேண்டும். நமது கிராமங்களிலேயே இளைஞர்கள் பண்ணை வளர்ப்பு, விவசாயம் செய்வதன்மூலம் கிராமிய பொருளாதாரத்தில் முன்னேற்றமடையமுடியும்.

எமது கிராமங்களிலேயே இருக்கின்ற வசதிகளைப் பயன்படுத்தி இளைஞர்கள் நாட்டை முன்னேற்றவேண்டும். வெளிநாடுகளுக்குச் செல்லும் பொழுது அங்கு நாம் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே கணிக்கப்படுகிறோம். எமது கலாசாரத்தையும், பண்பாட்டையும் அங்கு நாம் பேணிப்பாதுகாக்க முடியாது. தாய்நாட்டில் வாழ்ந்தால் தான் எமது மொழி, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிப் பாதுகாக்க முடியும் ஆகவே எமது இளைஞர்கள் வெளிநாடு செல்லும் மோகத்தைக் கைவிட்டு, உத்நாட்டிலேயே விவசாயம், கால்நடை வளர்ப்பு, கைத்தொழில்போன்ற துறைகளில் ஈடுபட்டு உத்நாட்டுப் பொருளாதாரத்தை மேலும் வலுப்பெறச்செய்யவேண்டும். கால்நடை வளர்ப்பிலிருந்து பால், இறைச்சி, முட்டை போன்றவற்றுக்கான உணவு தயாரிக்கவும் நாம் பெற்றுக்கொள்ள முடியும்."

திரு கருணைராஜன் இளைஞர்களுக்குப் பொருளாதார ஆலோசனைகளை வழங்குவதற்கு எந்நேரமும் தயாராயுள்ளார். இன்றைய ஆலோசனைகள் எமது இளைஞர்களுக்குப் பயன்படவேண்டும்.

-- தி. வெற்றிவேலுப்பிள்ளை --

இவ்வாறு தென்கிழக்கு ஆசியாவுக்கான கிராமிய வளர்ச்சி, சிறுவர்களைப் பற்றிய நிறுவனத்தின் ஆலோசகரும் பாழ் சித்தன்கேணி சிரத்தீபக் அதிபருமான இருநிச்சாட்டி கருணைராஜன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:

"மீதேன்வாயு' (பயோகாஸ்) தொழில் நுட்பமுறையானது. நவீன கிராமிய வாழ்க்கை முறைக்குப் பெரிதும் உதவுகிறது. வனாந்தரங்களில் கட்டுமரம் அன்றி வேறு தொழில், தொழில் நுட்ப முறைகள் விருத்தியடைந்த நாடுகளிலும் 'மீதேன் வாயு' முறை முக்கிய இடத்தை வகிக்கின்றது

மீதேன் வாயுவை [illegible] ஊட்டு, கோழிகளின் [illegible] போன்றவற்றிலிருந்து பெறக்காம் வெளிச்சத்தை ஏற்படுத்துவதற்கும் சமையலுக்கும் மீதேன்வாயு பெரிதும் பயன்படுகின்றது. எரிபொருள் பற்றாக்குறையான இக்காலத்தில் சாணத்துடன் பால், தயிர், நெய் முதலானவற்றைப் பெறலாம். இதன் மூலம் எமது யாழ்ப்பாணப் பிரதேசத்தின் பொருளாதாரத்தையும் அபிவிருத்திசெய்யமுடியும். கோழி, ஆடு, மாடு வளர்ப்பிலிருந்து பெருமளவு ஆதாயத்தை இளைஞர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் வெளிநாட்டிற்கு வேலைதேடிச் செல்லவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லாதுபோகிறது

இன்று வெளிநாடு செல்லும் இளைஞர்கள் பெருமளவு கஷ்டத்திற்குள்ளாவதை நாம் காண்கிறோம். எமது நாட்டிலேயே வாழக் இருக்கும் பொழுது அவற்றைப் பயன்படுத்தாது இளைஞர்கள் உதிரி

இன்றைய பலன்

ஜயவரு மாதம் 23-ந் திகதி

வெளிச்சம்

(9-11-1979)

மேடம்: உணவு விடுதி வைத்திருப்பவர்களுக்கு உற்சாகமான தினம். கட்டுவியாபாரத்தால் முன்னேற்றமுண்டு. செலவினங்கள் கைக்கடக்கியதாகவிருக்கும்.

இடபம்: சகோதரபாசம் தலைதூக்கி நிற்கும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும். காதலிப்பவர்களுக்கு வசீகரமான தினம்.

மிதுனம்: எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். குடும்பப் பிரச்னைகள் தலைதூக்கி நிற்கும். வீணான சிந்தனைகளுக்கு இடமளியாது இருக்கவும்.

கடகம்: பூமிப்பிணக்கில் தலையிடுதலால் வேதனைப்படுவீர்கள். தொழில்புரியும் இடத்தில் குழப்பங்கள் உருவாகும் பொறுமையே நன்று

சிங்கம்: வாகனச் சொந்தக்காரர்களுக்கு முன்னேற்றமான நாள். விருந்துபசாரத்திற்கும் இடமுண்டு இல்லத்தில் இனிமை பிறக்கும்.

கன்னி: கலைஞர்களுடன் பழகுவதில் அவதானம் வேண்டும். இதயத்தில் எரிமலை குமுறும். முன்யோசனையுடன் செயலாற்றுக.

துலாம்: பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும். சிலருக்கு புதிய வாகனத்தை முதலீடு செய்யவும் சந்தர்ப்பம் ஏற்படலாம். சமாதான தினம்.

விருச்சிகம்: கொள்கை வீரம் அதிக பற்றுதல் ஏற்படும் இலட்சிய நோக்குடன் காரியமாற்றுவீர்கள் பிள்ளைகளின் செல்வாக்கு வளரும்

தனு: அக்கினியாயுத பீடையுண்டு வாகனம் செலுத்துவோர் வலமாக செலுத்தவும். சிறுபிணக்கிடமுண்டு

மகரம்: புதுமையான எண்ணங்களால் உந்தப்படுவீர்கள். உடலில் தனி உற்சாகம் பிறக்கும் பெற்றோரின் உதவி கிடைப்பதற்கும் இடமுண்டு

கும்பம்: அதிக அலைச்சல் உங்களுக்கு எரிச்சலைத் தரும். நண்பர்களின் ஆலோசனைகளில் மயங்க வேண்டாம் கடமையில் சோர்வு தெரியும்.

மீனம்: கொண்டாட்டங்களில் அதிக உற்சாகம் தென்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் பிறக்கும். தெய்வ வழிபாடு நன்று

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

அரச அதிபர்களுக்கு

மேலும் ஒரு கடமை

(கொழும்பு)

[illegible] அதிபர்கள் [illegible] மாதம் முதலாம் திகதி தொடக்கம் மாவட்ட [illegible] பரிசோதகர்களாகவும் செயற்படுவார்கள்.

இத்தகவலை நேற்று பிரதமமந்திரி திரு பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்

அமெரிக்காவிலிருந்து

வெளியேறப்போவதாக மன்னர் ஷா அறிவிப்பு

நியூயோர்க், நவ 8

பெருக் நெருக்கடியை எதிர் நோக்கும் அமெரிக்க- ஈரான் உறவுகளைச் சுமுகம் படுத்தத் தொடர்தாக அமெரிக்கா விலிருந்து வெளியேறப்போவ தாக அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுவரும் மன்னர் ஷா தெரிவித்துள்ளார் என நியூ யோர்க் செய்திகள் தெரிவிக் கின்றன.

தமக்கு இடமளித்த அமெ ரிக்கா ராஜதந்திர துறையில் இக்கட்டான நிலையை எதிர்நோக் கியிருப்பதால் அந்நிலையைச் சுமுகப்படுத்துவதற்காகத்தாம் அமெரிக்காவைவிட்டு வெளி யேறப் போவதாக மன்னர் ஷா தெரிவித்துள்ளாராம். இதே சமயம் ஷாவைப் பரி சோதித்துவரும் டாக்டர்கள் அவரை வெளியே செல்ல அனு மதிக்க மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

பாக்-பாலஸ்தீன சமரச முயற்சி

லண்டன், நவ 8

அமெரிக்காவுக்கும் ஈரானுக் குமிடையில் ஏற்பட்டுள்ள ராஜதந்திர உறவு நெருக்கடி யில் சமரசம் ஏற்படுத்தும் முயற்சியில் பாலஸ்தீன விடு தலை இயக்கமும்- பாகிஸ்தா னும் ஈடுபட்டுள்ளதாக செய் திகள் கூறுகின்றன.

யு எஸ். பலாத்காரம் செய்யாது

ஈரானில் பணயம் வைக்கப் பட்டுள்ள தூதரக அதிகாரி களை விடுவிக்க அமெரிக்கா பலாத்கார நடவடிக்கைகள் எதையும் எடுக்கமாட்டாது என்று அமெரிக்க அதிகாரி கள் தெரிவித்துள்ளனர்.

தென்னைமர கொலைவழக்கு

[யாழ்ப்பாணம்]

மிருசுவில் தென்னைமரக் கொலை வழக்கு இன்றுகாலை யாழ் கேல் நீதிமன்றத்தில் நீதி பதி ஜனுப் எம். ஜாமீல் முன் னிலையில் தொடர்ந்து நடை பெறும்.

நேற்று முன்தினம் ஆரம்ப மான இவ்வழக்கு இன்றுகாலை வரை ஒத்திப்போடப்பட்டுள் ளது [ம]

மகளிருக்கான விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்ட மக ளிருக்கான விளையாட்டு விழா நாளை சனிக்கிழமை யாழ் துரையப்பா விளையாட்டு அரங் கில் நடைபெறவிருக்கிறது.

பிரதம விருந்தினராக மேல திக அரசாங்க அதிபர் திரு. என். பி. ஜெயரத்ன கலந்து கொள்வார்.

திருமதி எஸ். சண்முகசுந்த ரம் பரிசுகளை வழங்குவார்.

ஓர் உத்தம ஆசிரியை

சமுதாயச் சிற்பிகளை உரு வாக்கும் உலகம் ஆசிரிய உல கம். இவ்வுலகம் சீரழிவதற்கு ஞ்தாரின் எதிர்காலஉலகு வள மாரிந்து மிளிரும். ஆசிரிய உலகை அணிசெய்து அரிய ஒரு ஆசிரியையாக இருந்து இயற கெய்திய திருமதி சரஸ்வதி சுப்பிரமணியத்தின் அந்திமேய் டிக் கிரியைகள் நாளை நடை பெறுகின்றன

பல ஆண்டுகள் கல்லூரித் தலைவியாகவும் ஏழாண்டுகளுக்குமேல் பொன் பரமானந்தா வித்தி யாலயத்திலும் கல்விப்பணி புரிந்த இவரது இழப்பை நினை த்து நினைத்து துயருறும் மாணவ மலர்கள் ஏராளம். மலர்ந்த முகத்துடன், மாணவ மலர்க ளுக்கு மகிழ்வூட்டி ஆடல், பாடல், அபிநயங்காட்டி, கல் பாய் அணைத்து ஆழ்ந்த விட யங்களை அமுதென ஊட்டி, கிரிப்பிடைச் சிந்திவசரித்தவர் திருமதி சரஸ்வதி சுப்பிரமணி யம் அவர்கள்.

மாணவர்களும் பெற்றோரும் தம்மைவிடே தனியிடம் கொடு த்து மகிழ்ச்செய்யும் அவ வுக்கு மனமொன்றி, கல்விப் பணி புரிந்தார் அதுவும் 'அரைநாள் வகுப்பு' போக்கிற்றி புதிய புதிய உத்தி களைக் கையாண்டு நவீனமாக கிலும் தம்பணி புரிந்தார்.

ஆசிரிய உலகில் விசுவரூ பமாக தன் தொழில் நேர்த்தியை கருமமாற்றிய அன்னாரது ஆன்மா சாந்தியுறுவதாக.

-ஏ ரி.பொ

குத்தகைக் காணிகள்

அரசு பாரபட்சமாக

வவனியா எம். பி. கண்டனம்

[தொழுப்பு]

வவனியாவில் அரச காணி களைக் குத்தகைக்கு எடுத்தவர் களின் விஷயத்தில் அரசாங் கம் பாரபட்சமாக நடந்து கொள்கிறது என்று வவனியா எம். பி திரு. ரி. சிவதேச பரன் நேற்று பாராளுமன்றத் தில் குற்றஞ்சாட்டினார்

1966ல் ஆண்டு யு எக் பி அரசாங்கம் குத்தகைக்கு காணிகள் வழங்கியது. பின் னர் முன்னைய அரசாங்கம் காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சில காணிகளை சுவீகரித் தது. ஆனால் இந்த அரசு காரணம் எதுவுமின்றி இக் காணிக் குத்தகைக்காரர்களை ராணுவத்தைக்கொண்டுவெளி யேற்ற முற்படுவது நியாய மற்ற செயலாகும் என்று திரு சிவதேசபரன் கூறினார்.

வேறு இடங்களிலும் இப் படியான குடியேற்றங்கள் இடம்பெற்றுள்ளன ஆனால் அங்கு இப்படி அரசு செய்ய வில்லை இது பாரபட்சமான நடவடிக்கையாகும் என்றார்.

நல்லூர் எம் பி திரு எம் சிவசிதம்பரம் பேசியபோது கிராம அபிவிருத்திச்சட்டத் தின்கீழ் தமது தொகுதியில் எடுக்கப்பட்ட காணிகள் திருப் பிக் கொடுக்கப்படவிருப்பதாக அறிவதாகவும் இவற்றைத்தடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

மாதமுடிவுக்குள் 25 பஸ்கள்

இம்மாதம் முடிவுக்குள் 25 புதிய பஸ்கள் வடபகுதிக்கு அனுப்பப்படும் என நேற் றிரவு பாராளுமன்றத்தில் தீவுப்பகுதி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில் பிரதி போக்கு வரத்து அமைச் சர் தெரிவித்தார்

கல்கேசுத்துறை சீமெந்து கூட்டுத்தாபனத்தில் அமைச் சர்களதும், பிரதி அமைச்சர் களதும் துண்டுகளுடன் வரும் வர்கள் வசதியாக சீமெந்து பெற்றுக்கொள்கிறார்கள் என் றார். இது கள்ளச்சந்தையில் விற்கப்படுவதாகவும் இதனால் சீமெந்து தட்டுப்பாடு ஏற்படுவ தாகவும் இதனைத்தடுக்கவேண் டும் என்றும் யாழ்ப்பாணம் எம் பி திரு வெ யோசேப் வரதன் தெரிவித்தார்

பிரதம மந்திரி திரு ஆர் பிரேமதாஸ பதிலளிக்கையில் துண்டுமுறையை ஒழிப்பது அரசின் கொள்கையென்றும், இந்நிலையை நீக்க நட வடிக்கை எடுக்கப்படும் என் றும் கூறினார் [ம]

பிரதி கல்விமா அதிபர் இன்று விஜயம்

[மட்டுவில்]

பிரதி கல்விமா அதிபர் டாக் டர் ஜோர்ஜ் மெண்டிஸ் இன்று சாவகச்சேரிக்கு உத்தி தியோகபூர்வமாக விஜயம் செய்கிறார்.

டாக்டர் ஜோர்ஜ் மெண் டிஸ் கல்லூரி ஸ்ரீ சண்முகா னந்தா வித்தியாலயத்தில் நடைபெறும் யாழ் மாவட்ட கல்வி வட்டார சிறிய பாட சாலை அதிபர் பயிற்சி முகா மில் கலந்துகொள்வதுடன் இன்று இரவு நடைபெறும் கிராம மக்கள், கிராம அபிவிரு த்திச் சமூகங்கள், சங்கங்கள் கலந்துகொள்ளும் கிராமதான நிகழ்ச்சியிலும் பங்குகொண்டு உரைநிகழ்த்துவார்.

நல்லூர் வட்டார பா. அ. ச. சம்மேளன பொதுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

நல்லூர் வட்டாரப் பாட சாலை அபிவிருத்திச் சங்க சம் மேளனப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை கந் தர்மடம் காளப்பிரகார வித் தியாசாலை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது

வலயக்கல்வி அதிகாரி திரு கு. சோமசுந்தரம் தலை மையில் நடைபெறும் இக்கூட் டத்தில் திரு மு வேலுத் பரம் எம். பி. பிரதம விருந் தினராகக் கலந்துகொள்ளு வார். யாழ் கல்வி அலுவல கப் பொதுஜனத் தொடர்பு அதிகாரி திரு. வி. நல்லையா "பெற்றோர் பட்டயம்" என்னும் பொருள்பற்றி உரையாற்று வார்.

சுவடிகள் தினம் 19-ம் திகதி ஆரம்பம்

'ஈழநாடு' 30-10-79 இதழ் 6-ம் பக்கத்தில் "சுவடிகள் தினம்" என்ற தலைப்பில் வெளி யான செய்தியில் இரு தவறு கள் இடம்பெற்றுள்ளன அவ தறத் திருத்தி (1) நவம்பர் மாதம் 19-ம் திகதி முதல் 23ம் திகதிவரை சுவடிகள் வாரம் அனுஷ்டிக்கப்படும் என்றும் (2) 'ஏன் பதிவேடுகளை முகாமை செய்தல்வேண் டும்?' என்பதை விளக்கும் சிங் களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் அமைந்த பிரசுரம் இவ்வாரத்தில் அரச அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் வரலா கவும். [ஆ—வி]

647 எழுது...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உணவுப் பொருட்களுக்கு ஆக்குறைந்த கொள்விலை நிர் ணயிக்கப்பட்டுள்ளது.

சோளம் ஒருத்தல் 75 சதம், உழுந்து ஒருத்தல் ரூபா 1-60 சதம், இறுங்கு ஒருத்தல் 60 சதம், சோளாபின் ரூபா 2-00, எள்ளு ஒருத்தல் ரூபா 2-25 சதம், நிலக்கடலை ஒருத்தல் ரூபா 2-25 சதம், மிளகாய் ஒருத்தல் ரூபா 8-60 சதம், மஞ் சள் ஒருத்தல் ரூபா 5-00.

இவ்வாறு ஆக்குறைந்த விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள் ளன. [ம]

அந்தியேஷ்டி அழைப்பு

திருவாளர் சிற்றம்பலம் வல்லிபுரம் அவர்களின்

அந்திமக் கிரியையின்போது சமுகம்தந்து ஆறு தல் கூறியும். அனுதாபச் செய்திகள், மலர் மாலைகள், மலர் வளையங்கள் அனுப்பியும் எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைவர்க் கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றோம்.

அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் 10-11-79 சனிக்கிழமை காலை 7 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணத்தில் தங்களையும் தங்கள் குடும்பத் தினரையும் சமுகம்தந்து மதிய பந்திபோசன வைபவத்திலும் கலந்துஏகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லிபுரம் சினிமா (கொற்றை தியேட்டர்) நெல்லியடி, கரவெட்டி

பாரியாரும், மக்களும்.

4049

மக்கிஞென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை திருச்சிராப்பள்ளி மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச்செல்ல

மற்றும் பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக் உலகின்எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்துகொள்ள இன்றே தொடர்புகொள்ளுங்கள்

மக்கிஞென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்

தபால் பெட்டி இல: 92

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி! 8154

பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!

மரண அறிவித்தல்

நிர்மலன் கந்தையா

கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்தவரும், யாழ் கல் டிடட்பொருள் கட்டுவிதாடன முகாமையாளருமான நிர்மலன் கந்தையா காலமானார். இவர் காலஞ்சென் றவர்களான புவனேஸ்வரி, நிஷ்யா, நிரேஷா, நிரஞ்சி ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற இராசதுரை ஓவசியரின் மருமகனுமாவார் அன்னாரது ஈமைக்கிரியை கள் நாளை சனிக்கிழமை (10-11-79) காலை 10 மணிக்கு கொக்குவில் மயானத்தில் நடைபெறும் 4051

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் அதனாலத்தாரால் யாழ்ப்பாணம் நிலாவரை வீதி கொக்குவில் 66-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 9 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. GB/8348/78 The Eelanadu P B No 49 Telegram Eelanadu
'Phone: 389